**செ. கு. எண்: 023** **நாள் : 18.01.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 18.1.2016

18.7.2015 அன்று புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அம்புராணி கீழாநிலை கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மகன் செம்புலிங்கம் என்கிற சின்னா;

19.7.2015 அன்று புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கத்தக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துக்குமார்;

22.7.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், சின்ன சோழியம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சீனிவாசன் என்பவரின் மனைவி மஞ்சுளா;

24.7.2015 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடியைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியன் என்பவரின் மனைவி திருமதி காந்திமதி;

25.7.2015 அன்று ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், கருவாட்டுனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. கைலாசம் என்பவரின் மனைவி காமாட்சி;

1.8.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், வள்ளவிளையைச் சேர்ந்த திரு. நிகோலஸ் என்பவரின் மகன் வினு;

6.8.2015 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சோத்தியகுடி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மகன் சுந்தரேசன்;

10.8.2015 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. குட்டியாண்டி என்பவரின் மகன் சிவராமன்;

14.8.2015 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் கிராமத்தைச் சேர்ந்த திரு. மதனசெல்வம் என்பவரின் மகன் மதன்ராஜ் மற்றும் திரு. ரவிசங்கர் என்பவரின் மகன் ராஜா;

16.8.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், கங்கைக்கொண்டான் கிராமம், அணைத்தலையூர் பகுதியைச் சேர்ந்த திரு. இருதயராஜ் என்பவரின் மகன் ஆரோக்கியசாமி;

17.8.2015 அன்று தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கோவிலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடேசன் என்பவரின் மகன் பஞ்சநாதன்;

பாபநாசம் வட்டம், சருக்கை கிராமத்தைச் சேர்ந்த திரு. பார்த்தசாரதி என்பவரின் மனைவி பானுமதி;

18.8.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், சித்தலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. அய்யாங்குட்டி என்பவரின் மகன் வெள்ளையன்;

23.8.2015 அன்று தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், குருவிக்கரம்பை கிராமத்தைச் சேர்ந்த திரு. சௌந்தரராஜன் என்பவரின் மகன் பாரதிதாசன்;

கடலூர் மாவட்டம், திருப்பணாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தம்புராஜ் என்பவரின் மகன் கலியமூர்த்தி மற்றும் திரு. குப்பன் என்பவரின் மகன் சுந்தர்ராஜ்;

26.8.2015 அன்று வேலூர் மாவட்டம், திருப்பத்தூரைச் சேர்ந்த திரு. நசீர் அகமது;

27.8.2015 அன்று சென்னை, பெரம்பூரைச் சேர்ந்த திரு. ராஜி என்பவரின் மகன் சிறுவன் அஜய்;

31.8.2015 அன்று தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், கீழ்ப்பிடாகை அப்பன்கோவில் கிராமத்தைச் சேர்ந்த திரு. கசமுத்து மற்றும் திரு. முத்துகிருஷ்ணன்;

2.9.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், ஏழுதேசம்-சி சின்னத்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. அமிர்தையன் என்பவரின் மகன் சிலுவையன் ;

4.9.2015 அன்று ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், தாளையடிக்கோட்டை பகுதியைச் சேர்ந்த திரு. வெள்ளைச்சாமி என்பவரின் மகன் முனியாண்டி ஆகியோர் இயற்கை இடர்பாடுகள் காரணமாக உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **23** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**